குறுக்கு விசாரணை

**தேதி :** 17.11.2025 **SC.No. :** 303/2023 PW :2 எஸ். அருண்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனது தந்தையும், அசா.1 ன் ஜெயக்குமார்என்பவரின் தந்தையும் உடன் பிறந்தவர் என்றால் சரிதான். அசா.7 தங்கபுஷ்பம்என்பவரும் எனது தாயாரும் உடன் பிறந்த சகோதிரிகள் என்றால் சரிதான். எதிரிகளின் பூர்விக ஊர் கலிங்கப்பட்டி. என்னுடைய பணி நேரம் காலை 9.00 முதல் மாலை 5.30 வரை என்றால் சரிதான். ஜெயக்குமார் வீட்டிற்கும், எதிரியின் வீட்டிற்கும் இடையில் தோரயமாக 100 மீட்டர் இருக்கும் என்றால் இருக்கும். எதிரியின் வீட்டிற்கும், ஜெயக்குமார் வீட்டிற்கும் இடையே ஒரு பொது பாதை, தென்னந்தோப்பு மற்றும்புகார்தாரரின் வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் தாக்க முற்படும் போது நான் தடுக்க முயற்சித்தேனா என்றால் இல்லை. நான் சொன்ன தேதியில் சொன்ன நாளில் அசா.1 கெட்ட வார்த்தைகள் எதுவும் பேசவில்லை என்றாலும், அசா.1 ற்குஎதிரிகளால் எந்த வித வெட்டுக்காயமும் ஏற்பட வில்லை என்றாலும், எதிரிகள் சரஸ்வதி மற்றும் லிங்கசாமியும் அசா.1 போக விடாமல் தடுத்து பிடித்துக்கொண்டார்கள் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் துறைக்கு தொலைபேசியின் மூலம் தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் விசாரணையில் தொலைப்பேசியின் மூலம் தகவல் சொன்னதாக சொன்னேன். நான் சம்பவம் நடந்த தேதியில் சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்வது நேரில் பார்த்ததாக சொல்வதும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

**இல்லை.**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.19 12:07:28 +0530